
www.padippakam.com

# 4வது ஆண்டு மலர்



**தமிழர் கலாச்சாரக் கழகம்**
(ஹொல்பெக் சுற்று வட்டாரம்)

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தமிழர் கலாச்சாரக் கழகம்

## 4 வது ஆண்டு மலர்

## 1993

படிப்பகம்

# ஆசிரியர் பக்கம்

கவிச்சக்கரவர்த்தி கம்பனின் இராமாயணத்தையும் வள்ளுவனின் திருக்குறளையும் இளங்கோவின் சிலப்பதிகாரத்தையும் மகாகவி பாரதியாரின் கவிதைகளையும்ஆபரணமாகப் பெற்று தன்னை அலங்கரித்துக் கொண்டவள் எம் தமிழ் அன்னை. அத்தகைய தமிழ் அன்னையை நாமும் தமிழால் அலங்கரிக்க முற்படுவது ஒரு குழந்தைத் தனமான ஆசையே ஆகும்.

பொன் வைக்கும் இடத்தில் பூவை வைத்திருக்கிறோம். தவறுகளை மறந்து திறமைகளை ( ஏதும் இருப்பதாக நீங்கள் கருதினால் ) படித்து எம் உணர்வுகளில் எம்முடன் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஆசிரியர்
அளவை துருபரன்

" எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு."

## தலைவரிடமிருந்து....

ஐந்தாவது ஆண்டை நோக்கி அடி எடுத்து வைக்கும் கழக அங்கத்தவருக்கும் நான்காவது ஆண்டை பூர்த்தி செய்த பெரு மகிழ்ச்சியோடு நான் கூறிக் கொள்வது கடந்தகாலங்களிலும் நான் கடந்து வந்த காலத்திலும் எனக்கு தோளோடு தோள் நின்று உதவி புரிந்த நிர்வாகத்தினருக்கும் அங்கத்தவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள் கின்றேன் .

கழகம் என்று ஒன்று இருக்கும் போது அதில் பல நன்மை தீமைகளை நோக்கத் தான் வேண்டும். இவற்றை எல்லாம் மதியின் கண் உள்ள மறு போல மறந்து ஐக்கியப்பட்டு இனிக்கடக்கப் போகும் காலங்களுக்கு உங்கள் நேச கரங்களை நீட்டிஆதரவு கொடுத்திடுவீர்கள் என்ற நம்பிக்கை யோடு எனது இவ்வாண்டின் பணியை எடுத்துரைக்கின்றேன்.

எம்மால் முடிந்த அளவு கழக அங்கத்தவர்களின் விருப் பங்களை பல் வேறுபட்ட நிகழ்ச்சிகள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளோம். கிறிஸ்மஸ பண்டிகை தைப் பொங்கல் வருடப் பிறப்பு விழா வாணி விழா ஆண்டு விழா போன்ற விழாக்களை நடத்தியதோடில்லாமல் விளையாட்டுப் பிரியர்களுக்காக அவர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க வழமை போல் இவ்வாண்டும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியை 18-12 93 ல் நடத்த தீர்மானித்துள்ளோம்.

மேலும் மேலும் இப்படியான போட்டிகளை

www.padippakam.com

இனிவரும் காலத்தில் நடத்தி கழகத்தின் பெயருக்கு சிறப்பை ஏற்படுத்தி கொடுக்கவேண்டும் என்று உங்கள் அனைவரிடமும் வேண்டிக் கொண்டு உடலாலும் மனத்தாலும் அங்கத்துவம் இல்லாத சகோதர சகோதரிகள் அளித்த உதவிக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

*வாழ்க கழகம் ஓங்குக ஐக்கியம்*

தலைவர்
*க திலீபன்*
தமிழர் கலாச்சாரக்கழகம்
ஹொல்பெக் சுற்றுவட்டாரம்



படிப்பகம்

www.padippakam.com

# கனாவானவினா

- செல்வன் -

முகில்களின் நெரிசல்களில்
முகம் இழந்து
உலகும் ஒரு நிலவாக,

நேர்வுகளின் நெரிசல்களில்
இன்று நீயும்
நினைவுகளில் ஒரு நினைவாக.

சரித்திரம்
நாம் சந்தித்த சமகாலத்தில் சரிவுகளைச்
சந்திக்க ஆரம்பித்தது.

எம் மண்ணில்
" றோஜா" பயிரிட
ஆரம்பித்த காலம் அது.

" றோஜா" வளர்ப்பில்
நானும் ஏதும் உதவலாம்
என வந்த போது
நறுமணம் கமழும் புதுமலராய்
நீயும் அங்கு நின்றாய்.

நாம் நாட்டிய றோஜா
துளிர் விட ஆரம்பித்த போது
விடிவு விரைவில் என
முடிவு செய்தோம்.

" றோஜா" வளர்ப்பில்
நீ காட்டிய அக்கறைகள்
என்னை அயர வைத்தது.
என் மனதில்
உன்னை உயர வைத்தது.



படிப்பகம்

உனை புரிந்து கொள்ள
முனையும் போது
புளகாங்கிதம்
எனக்குள் புகுந்து கொண்டது.

அன்று பூப்போன்று
இருந்த என் இதயம்
இருக்க இடம் இன்றி
நீ மட்டும் நிறைந்து
இருக்கும் இடம் ஆனது.

மலருடன் உறவாட
தேடி வரும் வண்டுகள்
பேசுகின்ற பாசையை
ஓசை இன்றி
செவிமடுக்க ஆசை என்பாய்.

பச்சை நிறத்து புல்வெளியில்
கொள்ளை அழகுடன்
வெள்ளை நிறத்துப் பறவைகள்
கிள்ளை மொழி பேசி
காதல் செய்து உறவாடும்.

காலை வேளைகளில்
கதிர்களை உண்டு விளையாடும்
வெள்ளைப் பறவைகளை
கலங்க வைத்துக் கலைக்கும்
வயல்வெளி மனிதரை – நான்
எவ்வாறு நேசிக்க? என்பாய்
நெஞ்சுருக.

வண்ணாத்திப்பூச்சிகளின்
இறகுகளில்
இத்தனை நிறங்கள்
எங்கனம் வந்தன ? என

வினவுவாய்
நீள் விழிகள் விரிய
ஆச்சரியம் நிறைய

களிப்புடன்
கனவு காணலாம் என – சற்று
நாம் கண்ணயர்ந்தோம்.

சுதந்திரமாக
சுற்றும் காற்றாக
கவலை இன்றி அலைவதாக
கனவுகள் கண்டோம்.

கண் விழித்துப் பார்த்த போது
நாம் நட்ட றோஜா
தானாக
வளர ஆரம்பித்து இருந்தது
இலைகளே இல்லாமல்
கிளைகள் எல்லாம் முட்களாக.

முதற்கோணல் முற்றும் கோணல்
முளையிலேயே கிள்ளி விடுவோம் என
முன் மொழிந்தனர்
முதியவர்கள் சிலர்.

அடுத்த சில தினங்களில்
அபிப்பிராயம் கூறியவர்கள்
" றோஜா" க் கிளைகளில்
தொங்கிக் கொண்டு இருந்தனர்
வேருக்கு குருதியை
தாரை வார்த்தபடி.

றோஜா
மேலும் வளர ஆரம்பித்தது
றோஜா போல் அல்லாமல்
இராட்சதத் தனமாக...........

வாட்கள் போன்ற முட்களுடன்
இலைகளே அற்ற கிளைகளுடன்
பார்வைக்கு பயங்கரமாக
வானளாவ வளர ஆரம்பித்தது.

றோஜா முட்களுக்கு
கூர்பார்க்க
அன்றாடம் மனிதர்கள் தேவைப்பட்டனர்.

றோஜாக் கிளைகளிலிருந்து
வளைந்து வளைந்து
வளர்ந்த விழுதுகள் – தேடித் தேடி
மனித உரிமைகளை
வளைத்துக் கொண்டன.

கிணறு வெட்ட
பூதம் புறப்பட்டது போலவே
எங்கள் முயற்சிகளின் முடிவுகளும்.

உந்தன் உதடுகள்
உச்சரிக்க எத்தனித்த
வார்த்தைகள் எல்லாம்
குரல்வளையில் வைத்தே
பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது.

நீ பயணமாகும்
பாதைகளை பதிவு செய்ய
பதிவு கருவிகள் – உந்தன்
பாதங்களுடனேயே பொருத்தப் பட்டன.

உந்தன் கண் அசைவுகளுக்கும்
கருத்துக்கள்
கண்டு பிடிக்கப் பட்டு
காரணங்கள் கோரப்பட்டன.

கண்களின் ஓரம்
கவலையின் பாரம் தெரிய— வட
கடல் ஓரமாய்
கடைசித் தடவை— உனை நான்
கண்ட நேரம்
என் மனக் கதவை
உனக்காக திறந்துவிட்டேன்.

எமக்காக நாம் வாழ
என்னுடன் கூட வருவாயா? என்று
என் நீண்ட நாள் ஆவலுக்கு
வினா வடிவம் கொடுத்தேன்.

வட கடல் காற்றும்
நாகரீகம் அறிந்தது
எம்மைத் தனியே விட்டு
மெல்ல நழுவிச் சென்றது.

வெளிச்சத்தை இழந்து விட்ட
வெளிச்ச வீட்டின் மீது
விண்மீன்களின் வெளிச்சம்
விழுந்து கொண்டு இருந்தது.

உந்தன் உதடுகள்
உதிரவுள்ள வார்த்தைகட்காக
ஆர்ப்பரிக்கும் அலைகளும் — சற்று
அடங்கி அமைதி காத்தது.

விடைக்காகச் சிந்திக்க
நீ மௌனித்த சில கணங்கள்
திகில் நிறைந்த
பலயுகங்களாக எனக்குப்பட்டது.

உந்தன் முத்துப்பற்களுக்குள்
அகப்பட்டுத் துடித்தது
உந்தன் கீழ் உதடு,
எந்தன் மனதைப்போல..........

விடை அளிக்க முன்னர்
சிரிக்கவேண்டும் என்பது போல
சிரமப்பட்டு மெல்லச் சிரித்தாய்
விரக்தியுடன் ............

உயிர் மூச்சை மறந்தாலும்
சுதந்திரப் பேச்சை துறக்கலாமா?
என்று என்னை வினவினாய்
கன்னம் வழியே கண்ணீர் வழிய.

உன் வினாவுக்கு
விடை தெரியா விட்டாலும்
வினாவின் கரு புரிந்தது
என் மனம் பதறியது
இந்த உடல் உதறியது
அந்தக் கடல் கதறியது.

கரை ஓரம் கட்டப்பட்ட
ஒரு மணல் வீட்டை
அலை ஒன்று வந்து
கலைத்துவிட்டுச் சென்றது,
மனதோரம் இருந்த என் கனாவை
உன் வினா வந்து கலைத்தது போல.

இருட்டறைக்குள்
இல்லாத கறுத்தப் பூனையை
பாடுபட்டுத் தேடியது போலவே
உந்தன் தேடல்களும்.........

காரணத்தை
என்ன என்று சொல்ல?
காரியங்கள்
கை மீறிப் போய்விட்டன.

காலத்திற்கு என்ன கவலை
பந்தயம் கட்டி ஓடுவது போல
ஓடிக்கொண்டே இருக்கின்றது

துயரம்
தூரத்திற்கு
துரத்திக் கொண்டே வந்திருக்கின்றது
இறுதி வரை விடுவதில்லை என்ற
உறுதியுடன்....................

" கை விளக்கில் படி
கை விளக்கையும் படி, விளக்கமாகும்"
என்ற மேத்தாவின் வரிகளுக்கு
நீ அன்று தந்த விளக்கம்
இன்று வரை குழப்பமாகவே இருக்கிறது.

கவிதைகளை
நான் இப்போது எல்லாம்
நேசித்து வாசிப்பது இல்லை

கவிதைகளையும்
கருத்துக்களையும்
வாதிக்கும் எவரும்
இப்போது என்னருகில் இல்லை

மென்மைகளையும்
மேன்மைகளையும்
பூசிக்கும் மனிதர்களை
உனக்குப் பிறகு
நான் இன்னும் காணவே இல்லை.

இயற்கை
வெற்றிடங்களை
அனுமதிப்பது இல்லை
என்ற தத்துவம்
என்னைப் பொறுத்த வரை
இறந்து போய் விட்டது.

தாமரை இலையில்
தங்கி இருக்கும்
தண்ணீர்த் துளி போல
நிகழும் நிகழ்வுகளுடன்
ஒட்டியும் ஒட்டாமலும் நான்....

நிறைந்து நிற்கும் நினைவுகளில்
மனதின் மூலையில்
நிலைத்து நிற்கும் ஒரு நினைவாக
இன்று —நீ............

# இராமகிருஷ்ணரின் உபதேசக்கதைகள்

— தொகுப்பு : நடா —

## நாரதரின் அறியாமை

ஒரு சந்தர்ப்பத்தில் நாரதருக்கு தனது பக்தி தொடர்பாகமனதில் சற்று ஆணவம் ஏற்பட்டு இருந்தது. இது தொடர்பாக நாரதர் நாராயண ரிடமே வினவினார்.

" நாரயணா என்னை விட உன்னை அதிகளவு தன் சிந்தையில்

வைத்து வழிபடும் எவரும் உண்டோ?" என்று. அதற்கு நாராயணர் தன்னுடன் கூட வந்தால் பூவுலகில் தனக்கு ஒரு சிறந்த பக்தன் இருப்பதனைக் காட்டமுடியும் என்று நாரதருக்கு கூறினார். இக்கூற்றின்படி நாரதரும் நாராயணரும் ஒரு நாள் பூராவும் குறித்த பக்தன் வீட்டிற்கு போய் இருந்து பக்தனின் பக்தியை நேரடியாக பார்வையிடுவது என்று உடன் பட்டுக் கொண்டனர்.

ஒரு நாள் அதி காலை குறித்த பக்தன் வீட்டிற்கு சென்றுமறைந்து இருந்து பக்தனைக் கவனித்தனர். பக்தன் அதிகாலையில் எழும்பும் போது "நாராயணா " என்று உச்சரித்த வண்ணம் கண்ணை விழித்தான். அதற்குப் பிறகு காலைக்கடன்களை முடித்துக் கொண்டு வயலுக்கு சென்றான். அங்கு வயலில் கடினமாக உழைத்த பின் மாலை வந்து தனது உணவை உட்கொண்டபோது இருள் கவிந்து விட்டது. தனது மனைவி மக்களுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து வீட்டு மீண்டும் திண்ணையில் வந்து நித்திரைக்குப் போகும்போது "நாராயணா" என்று ஒரு முறை பலமாக உச்சரித்துவிட்டு உடனேயே உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டான்.

நாரதருக்கு சிரிப்பு வந்தது. நாளுக்கு இரண்டு தடவைகள் மட்டும் உன் நாமத்தை உச்சரிக்கும் இந்த மனிதன் சதா உன் நாமத்தையே உச்சரித்துக் கொண்டிருக்கும் என்னைவிட எவ்வாறு மேலானவன் ஆவான் என்று நாராயணரிடம் கேட்டார். அதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்றால் நீர் ஒரு போட்டிக்கு உடன்பட வேண்டும்" என்று நாராயணர் கூறினார். நாரதர் உடன்பட ஒரு அகப்பை நிறைய நெய்யை வைத்துக் கொண்டு ஒரு துளி சிந்தாமல் மூவுலகங்களையும்சுற்றி வரவேண்டும்" என்று நாராயணர் நாரதருக்கு நிபந்தனை விதித்தார்.

இதன்படி நாரதர் அகப்பை நிறைய நெய்யுடன் மிகக்கவனமாக உலகங்களைச் சுற்ற ஆரம்பித்தார். நடு வழியில் நாராயணர் வந்து "நாரதரே போட்டி கடினமாக இருந்தால் இப்போதும் உமது தோல்வியை ஒப்புக்கொண்டால் போட்டியை கை விடலாம்" என்று நாராயணர் கூறினார்
அதற்கு நாரதர் உம்முடன் போட்டி முடிந்தபின் வந்து பேசிக் கொள்ளுகிறேன் என்று கூறிவிட்டு கவனத்துடன் தன் பாதையில் நடந்து கொண்டிருந்தார். ஒருவாறாக நாரதர் நெய் நிறைந்த அகப்பையுடன் மூவுலகங்களையும் வெற்றிகரமாக சுற்றிக்கொண்டுவந்து சேர்ந்தார். அப்போது நாராயணர் கேட்டார் " நாரதரே இப்படி வலம் வரும் போது எத்தனை தடவைகள் என்னை நினைத்துக் கொண்டீர்?" என்று. அதற்கு நாரதர் " அது எப்படி ? நெய் சிந்தப்படாமல் பார்ப்பது எங்கே ? உம்மை நினைப்பது எங்கே? என்று வினாவினார். அப்போது நாராயணர் " பார்த்தீரா ஒரு அகப்பை நெய்யை சுமந்து கொண்டு வரும்போதே என்னை உம்மால் நினைக்கமுடியாது உள்ளது. குடும்பப் பாரங்களுக்கு மத்தியில் என்னை இரண்டுதடவைகளென்றாலும் நாலாந்தம் நினைக்கும் பக்தன் மேலானவன்தானே? என்று கூறினார்.

நாரதர் தனது ஆணவம் அடங்கி பரந்தாமனின் பாதங்களைப்பற்றிக் கொண்டார்.

## இராமனின் கலக்கம்

வனவாசத்தில் சீதையைப்பறிகொடுத்த பின்னர் சீதையை தேடிக் கொண்டு இலக்குவனுடன் வந்த இராமபிரான் ஒரு குளத்தை அடைந்தார். கோதண்டத்தை

நிலத்தில் புதைத்துவிட்டு தாக சாந்தி செய்துவிட்டு கோதண்டத்தை மீண்டும் எடுத்தபோது அங்கு கோதண்டத்தினால் நெரிபட்டு தவளையொன்று துடித்துக் கொண்டி ருப்பதைக்கண்டார். மனக்கலக்கத்துடன் தவளையைக் கேட்டார் "தவ ளையே நீ நெரிபடும்போது ஒரு குரல்கொடுத்திருந்தால் உனக்கு துன்பம் நிகழாமல் தடுத்திருப்பேன். நீ ஏன் குரல் கொடுக்காமல் மௌனம் சாதித்தாய்?" என்று.

தவளை விடை பகர்ந்தது " இராமா வேறு எவராவது எனக்குத் துன்பம் தரும்போது இராமா இராமா என்று கதறுவேன் . துன்பம்
உன்னால் வரும்போது எவ்வாறு கதறுவது என்று யோசித்து விடை தெரியாததனால் மௌனமாக இருந்து விட்டேன்"என்று. இராமபிரான் ஒருகணம் மனமதிர்ந்து பின் தன் அருள்பார்வையினை தவளைமீது செலுத்தினார்.

## பிறவிக்கொடை

ஒரு சமயம் தருமன் கண்ணனிடம் கேட்டான் " கண்ணா நாங்களும்தான் கேட்பவர்களுக்கு இல்லையென்று கூறாமல் வாரி வழங்கிக்கொண்டிருக் கிறோம். ஆனால் கர்ணனை மட்டும் ஏன் கொடையாளியென்று இந்த உலகம் போற்றுகின்றது? " என்று . அதற்கு கண்ணன் பகர்ந்தான் இதனை நீயே உணர்ந்து கொள்ள வழி செய்கிறேன் என்று கூறி தனது அருளினால் இரண்டு தங்க மலைகளையும், இரண்டு வெள்ளிமலைகளையும் உருவாக்கினான். பின்னர் "நாளை காலையில் இருந்து இருள் கவியமுன்னர் இவற்றைத்தானம் செய்து முடித்துவிடு பார்க்கலாம் " என்று

கூறினான்.

அடுத்த நாள் அதி காலையில் பஞ்சபாண்டவர்கள் மலையை வெட்டி வெட்டி யாசகர்களுக்கு தானம் வழங்கத்தொடங்கினர். எவ்வளவோ சுறுசுறுப்பாக வழங்கியும் ஒரு மலையின் ஒரு சிறு பகுதியைத்தான் மாலைவரை கொடுத்து முடிக்கக் கூடியதாக இருந்தது. அப்போது வந்த கண்ணன் கூறினான் " கர்ணன் ஆக இருந்திருந்தால் இவ்வளவிற்குள் கொடுத்து முடித்திருப்பான் " என்று. பாண்டவர்கள் ஏளனமாக கூறினர் "எங்கே கர்ணனை அழைத்து தானம் செய்ய ஆஞ்சையிட்டு பார்க்கலாம்" என்று.

கண்ணன் கர்ணனை அழைத்து நிபந்தனையை விளக்கினான்
" இதற்கு ஒரு நாள் வேண்டியதில்லை. இதோ உங்கள் கண் முன்னா லேயே முடித்துக் காட்டுகிறேன்" என்று கர்ணன் கூறினான். அந்த வழியினால் சென்ற இரண்டு யாசகர்களை அழைத்து " இதோ ஆளுக்கு ஒரு தங்க மலையையும், வெள்ளிமலையையும் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறி தனது கடமையை முடித்து விட்டு கர்ணன் விடை பெற்றுச் சென்றான்.

கண்ணன் பாண்டவர்களை புன்முறுவலுடன் பார்க்க பாண்டவர்கள் தலையைக் குனிந்து கொண்டனர்.

## தபசியும் தாசியும்

ஒரு தபசியின் ஆச்சிரமத்திற்கு அருகாமையில் உள்ள ஒரு இல்லத்தில் தாசி ஒருத்தி வந்து குடிபுகுந்தாள். தாசியிடம் இரக்கம் கொண்ட தபசி தாசியைத் திருத்தவேண்டும் என்று முடிவு செய்தார். எனவே தாசியிடப்

www.padippakam.com

ஒவ்வொரு ஆடவர் வரும் போதும் ஆச்சிரமத்திற்கு அருகாமையில் ஒவ்வொரு சிறுகல்லை தூக்கி எறிவதனை வழமையாக்கிக் கொண்டார். எறியப்பட்ட கற்கள் ஒரு பெரும் கும்பியாக வளர்ந்தது.

தபசி ஒரு நாள் அந்தத்தாசியை அழைத்து "பார்த்தாயா நீ செய்த பாவங்களின் பருமனை" என்று கற்கும்பியைக் காட்டினார். பின்பு அவளுக்கு அறிவுரையும் கூறி அனுப்பி வைத்தார். தாசியும் தான் செய்த தவறுகளுக்காக மனம் வருந்தி ஆண்டவனிடம் மனதார மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். இருந்தபோதும் கற்கும்பி வளர்ந்து கொண்டே இருந்தது. தாசியும் அன்றாடம் தவறு செய்வதும் தனது தவறுகளுக்காக மனம் வருந்துவதும், கடவுளிடம் மன்னிப்புக் கேட்பதும் என்று நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டே போனது. காலம் ஓடிக் கொண்டிருந்தது.

ஒரே நாளில் தாசியும் தபசியும் இறந்து போனார்கள். தாசியின் உடலை தகனம் செய்வதற்கு கூட ஆட்கள் இல்லாமல் இழுபட்டு நாய்களும் கழுகுகளும் தின்று தீர்த்தன் ஆனால் தபசியின்உடல் சகல மரியாதைகளுடனும் சிறப்பாக அடக்கம் செய்யப்பட்டது. இருவரின் ஆத்மாக்கள் யமலோகம் வந்தபோது தாசியின் ஆத்மா சொர்க்கத்திற்கும், தபசியின் ஆத்மா நரகத்திற்கும் செல்ல வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டது. தபசியின் ஆத்மா இது குறித்து பெரிதாக ஆட்சேபம் செய்தது. தான் தவத்தையே வாழ்வாக கொண்டு இருந்ததாகவும் தாசியின் ஆத்மா பாவத்தையே வாழ்வாக கொண்டு இருந்ததாக வாதிட் டது.

அப்போது சித்திர புத்திரன் சிரித்துக்கொண்டே கூறினான் "உனது உடல் பாவம் செய்யவில்லை



படிப்பகம்

அதனால்தான் உனது உடல் மரியாதையுடன் நேசிக்கப்பட்டது. பதிலாக தாசியின் உடல் பாவம் செய்ததால் இவளின் உடல் அலங்கோலப்படுத்தப்பட்டது. பதிலாக உனது மனம் எப்போதும் தாசி செய்த பாவங்களையே எண்ணிக்கொண்டிருந்திருக்கிறது எனவே தான் உனக்கு நரகம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பதிலாக உடலால் தாசி பாவம் செய்தாலும் தன் பாவங்களைப்பற்றி அன்றாடம் வேதனைப்பட்டிருக்கிறாள். அத்துடன் பரம் பொருளை அவளது மனம் நாடிச் கொண்டிருந்திருக்கிறது. எனவேதான அவளது ஆத்மாவிற்கு சொர்க்கம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது" என்று.

தபசியின் ஆத்மா உண்மை உணர்ந்து நரகத்திற்கு செல்ல தயாரானது.



www.padippakam.com

# பாம்பு செய்த தவறு

ஒரு ஊரில் ஒரு நல்ல பாம்பு இருந்தது அது தனது பெயருக்கு முரணான வகையில் மனிதர்களைக் கண்டால் சீறி துரத்தி துரத்தி கடிக்கும். இதனால் சில மனிதர்கள் மாள வேண்டியும் ஏற்பட்டது. ஊரில் உள்ள மக்கள் எல்லாம் அந்த பாம்புக்கு மிகவும் பயந்தவர்களாக இருந்தனர். அந்த ஊரின் வழியாக புனித யாத்திரை ஒன்றினை மேற்கொண்டு இருந்த ஒரு துறவி இதனை அறிந்து அந்தப் பாமபினை அழைத்து "நீ இவ்வாறு செய்வதனால் உன்னை மக்கள் வெறுக்கிறார்கள் அப்பாவி மக்களை கொல்வது பாவமானது. ஆகவே நீ இனிமேல் இவ்வாறு கொடூரமாக நடந்து கொள்ளக் கூடாது" என்று அறிவுரை வழங்கினார். பாம்பும் தன் தவறுகளை உணர்ந்து தான் இனித் திருந்தி நடப்பதாக துறவிக்கு வாக்குறுதி கொடுத்தது. துறவியும் மன நிறைவுடன் தனது யாத்திரையைத் தொடர்ந்தார்.

பாம்பு திருந்தி விட்டது என்ற செய்தி ஊரெங்கும் பரவியது. மக்கள் பாம்புடன் நெருங்கி நெருங்கிப் பழக ஆரம்பித்தனர். அடித்து துன்பங்கள் கொடுத்தாலும் பாம்பு சாதுவாக இருந்ததனைப் பார்த்து சிறுவர்கள்பெரியவர்கள் யாவரும் பாம்பைக் கல்லால் எறிந்தும், தடியால் அடித்துப் துன்புறுத்த ஆரம்பித்தனர். துறவியின் அறிவுரையை மனதில் கொண்டு எல்லாத்துன்பங்களையும் பாம்பு தாங்கிச் கொண்டது. ஒருநாள் சிறுவர்கள் செய்த கொடுமையான சித்திரவதை காரணமாக பாம்பு பெருமளவான காயங்களுடன் அசைய முடியாமல் ஊர்ந்து ஊர்ந்து தன் பாதையில் போய்க் கொண்டிருந்தது. புனித யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பிய துறவி பாம்பினை வழியில் சந்தித்து அதன் நிலைக்கான காரணத்தை வினாவினார். பாம்பு நடந்தவற்றை விளக்கியது. அதனை செவி மடுத்த



படிப்பகம்

துறவி கூறினார் " நான் உன்னை அப்பாவிகளை கடிக்க வேண்டாம் என்றுதான் கூறினேனே ஒழிய கடிப்பது போல நடித்து மக்களைப் பயமுறுத்த வேண்டாம் என்று சொல்லவில்லையே" என்றார்.

பாம்பு தன் தவறினை உணர்ந்து கொண்டது அதற்குப் பிறகு மக்களை கண்டவுடன் சீறி,படம் எடுத்தது கடிக்கப் போவது போல் நடித்து மக்களைப் பயமுறுத்த ஆரம்பித்தது.அதன் பின்னர் அந்த ஊர் மக்களும் பாம்பை கண்டால் சற்றுப் பயந்து ஒதுங்கிச் செல்ல ஆரம்பித்தனர்.


## மலர்களின் மணம்

மீன் வியாபாரத்தில் ஈடுபட்டுப் கொண்டிருந்த கரையோரப் பெண்கள் சிலர் மழை காரணமாக ஒரு அந்தணன் வீட்டு வாசலில் ஒதுங்க வேண்டி வந்தது வாசல் திண்ணையில் மழைத் துமியில் நனைந்து கொண்டிருந்த அந்த பெண்களை கண்ட அந்தணன் மனமிரங்கி தன் வீட்டுக்குள் மழை விடும் வரை வந்து தங்குமாறு அழைத்தான்.

குறித்த அந்தணன் கோயிலுக்கு பூமாலை தொடுத்துக் கொடுக்கும் பணியை தொழிலாக கொண்டவன். அதனால் அவனது வீட்டில் பல்வேறுபட்ட மலர்களின் நறுமணம் பரவியிருந்தது. அந்தணன் பிறவியிலேயே புலால் உண்ணாதவன். ஆகையால் குறித்த பெண்கள் கூடை நிறைய கொண்டுவந்த மீன் வகையின் மணத்தினை அவனால் தாங்கமுடியாதிருந்தது. என்றாலும் தான் முகத்தினை சுளித்தால் அந்த

கரையோரப் பெண்கள் கவலைப் படுவார்கள் என்று எண்ணி ஒருவாறாக தாங்கிக் கொண்டிருந்தான்.

கரையோரப் பெண்களுக்கும் அந்தணன் வீட்டில் பரவியிலுந்த மலர்களின் நறுமணம் தாங்க முடியாத வேதனையாக இருந்தது. தங்களுக்குள் இதுபற்றி இரகசியமாக பேசிக் கொண்டனர். இறுதியாக தமது கூடைக்குள் இருந்த ஒவ்வொரு கருவாட்டுத் துண்டினை ஒவ்வொருவரும் எடுத்து மணந்து கொண்டிருந்தனர் மழை விட்டு அந்தணன் வீட்டை விட்டு வெளியேறும் வரை.



## இதயமே

– தேவிதாசன் –

ஆயிரம் எண்ணங்களை கனனி போல்
அடைத்துவைக்கும் இதயமே
ஆனந்தக்கூத்தாடும் போது சரி
அடிபட்டு ஓடும் போதும் சரி
அடுத்தவன் நலனைப் பற்றி நீ
சிறிதேனும் சிந்திக்கின்றாயா
அது உனக்கு தேவையில்லாத வேலைதான்
ஏனென்றால்
ஆசைகளை அடக்க நீயென்ன கௌதம புத்தனா

## கழகம்

– தேவிதாசன் –

கலகக்காரர் கையில் கத்தி
கழகக்காரர் கையில் காகிதம்
கலகமும் கழகமும் இன்று
கலக்குகின்றது இங்கு
கலகமும் கழகமும் மொத்தத்தில்
கலகம்தான்
கலகக்காரருக்கு மண்டையில் ஒன்றுமில்லை
கழகக்காரருக்கோ அது அதிகம்
கல(ழ)கங்கள் இரண்டையும்
கலைக்கவேண்டும் இங்கிருந்து

# எழுத்துக்கள் எங்கே ?

– தேவிதாசன் –

ஏடு எடுத்து
எழுதிவைத்த
எழுத்துக்கள்
எங்கே

எண்ணங்களை
எண்ணி எண்ணி
எழுதிவைத்தேன்
எப்படி மறைந்தது
எங்கு சென்றது

எல்லாம் தெரியும்
எனக்கு
என்றார்
எப்படித் தெரியும்!
எல்லாம் என்றேன்

ஏமாற்றுவதற்கு
எவருக்கும் சொல்லத்தேவையில்லை
என்றார்
எழுதிய எழுத்துக்கள்
எங்கே என்று புரிந்து கொண்டேன்



படிப்பகம்



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

பதிப்பு பாரதிநிலையம் ஹொல்பெக்

படிப்பகம்